Registered as a NewsPaper

இலவசம்

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் -04

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -07 | 19-02-2004 | வியாழக்கிழமை | ஓசை 001

படச்சுருள்கள் அனைத்தையும் கணினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள்.
கணினி முறை வீடியோ மிக்சிங்.
பாடல் பதிவுகள்
படம் பிறேம்செய்தல்.

அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம்,
யாழ் சாலை,
கிளிநொச்சி.

R.V
பந்தல் சேவை,
தர்மபுரம்.

(சி-8689)

# வேட்பாளர் பட்டியல் தயாரிப்பில் புலிகளின் வற்புறுத்தல் எதுவுமில்லை!



மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன், மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன் ஆகியோரை தனித்தனியே அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் வரவேற்றபோது.

### தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

(லண்டன்)

**விடுதலைப்புலிகள் வற்புறுத்தலின் பேரிலேயே வேட்பாளர் பட்டியல் தயார் செய்யப்படுவதாகக் கூறுவது முற்றிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத விடயமாகும் என தமிழ் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பி.பி.ஸி.க்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.**

மேலும் அவர், கடந்த இரண்டு வருட காலமாக யுத்த நிறுத்தம் ஏற்பட்ட பின்னர் - தமிழர் விடுதலைக்கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மிகவும் கூடுதலான புரிந்துணர்வுடன் செயற்பட்டு வந்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இந்தத் தேர்தலில் தங்களுடைய பரிபூரணமான ஆதரவினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு அளிப்பதாக பகிரங்கமாகக் கூறி இருக்கின்றார்கள். ஆகையினால் அவர்களின ஆலோசனைப்படிநடக்க வேண்டியது அவசியம். இவ்விதமான ஆலோசனை கிளிநொச்சியில் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளும் நாங்களும் ஒன்றாகக்கூடி விடயங்கள் சம்பந்தமாகக் கலந்தாலோசித்த பொழுது எங்களுடைய கருத்துக்களை நாங்கள் கூறுவோம், அவர்களுடைய கருத்துக்களை அவர்கள் கூறுவார்கள். எனவே, எல்லோரும் சேர்ந்து முடிவெடுப்போம். அதில் எவ்விதமான தவறும் இல்லை.

அவ்விதமாக ஒரு முடிவெடுக்கப்படும்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரன் மனோகணேசன் தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களை நேற்று பகல் கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் வைத்து மலையக மக்கள் முன்னணித் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் மற்றும் தென் மாகாண சபை பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் ஆகியோர் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களின் அரசியல் பலத்தை ஒன்று திரட்டுவது பற்றி ஆலோசித்தோம்

### தமிழ்ச்செல்வனுடனான சந்திப்புக் குறித்து சந்திரசேகரன்

(அலுவலக செய்தியாளர்)

தமிழ் மக்களுடைய அரசியல் பலத்தினை ஒன்றுதிரட்டுவது தொடர்பாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடன் ஆலோசனை நடைபெற்றது. இது தொடர்பாக ஆக்கபூர்வமான, மிக முன்னேற்றகரமான பல கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டோம்.

இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளருடன் பேச்சுக்களை நடத்திய பின்பு மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டார்.

எதிர்வரும் தேர்தல் இலங்கை வரலாற்றிலேயே சிறுபான்மை மக்கள் மத்தியில் ஒரு அரசியல் திருப்பு முனையாக அமைய வேண்டும் என்பதிலேயே ஒரு உடன்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதனை நிச்சயமாக நிறைவேற்றுவோம்.

*எத்தகைய உடன்பாட்டினை எட்டியிருக்கிறீர்கள் அல்லது

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டமானும் ஹக்கீமும் இருக்கும்வரை ஐ.தே.மு.வை எவரும் வெற்றிகொள்ள முடியாது

### -முன்னாள் அமைச்சர் ராஜிதசேனாரட்ண

(கொழும்பு)

அமைச்சர்களான ஆறுமுகம் தொண்டமான், ரவூப்ஹக்கீம் போன்றவர்கள் எம்முடன் இருக்கும் வரை, ஐக்கியதேசிய முன்னணியை எவரும் வெற்றி கொள்ளமுடியாது என முன்னாள் காணி அமைச்சர் ராஜித சேனாரட்ண கூறியுள்ளார்.

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் தீர்க்கமானதொரு தேர்தலாக இது இருக்கும்!

### மேல் மாகாண மக்கள் முன்னணித் தலைவர் மனோகணேசன்

வரப் போகும் பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு-கிழக்கிலும், அதே போன்று வட கிழக்கிற்கு வெளியிலும், வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தீர்க்கமான தேர்தலாக நடைபெறப் போகின்றது என்பதனை கருத்துப் பரிமாறலின் போது பேசிக் கொண்டோம் என மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவரான மனோகணேசன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களுடனான சந்திப்புக் குறித்து கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு-கிழக்கைப் பொறுத்த வரையிலே வரும் தேர்தல் வடக்கு-கிழக்கில் வாழ்ந்து கொண்டு இருக்கின்ற தமிழ் தேசிய இனம் பெறக் கூடிய மக்கள் ஆணையாகக் கருதப்படும் என்ற கருத்தைப் பொதுவாக அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் எங்களுக்குத் தெரிவித்திருந்தார். அதை நாங்களும் முற்று

(IV ஆம் பக்கம் பார்க்க)

## பள்ளிக்குடா மீனவரின் வலையில் 300 கி.கி. நிறைகொண்ட சுறா

பூநகரி-பள்ளிக்குடாக் கடலில் முன்னூறு கிலோகிராம் நிறையுடைய சுறாமீன் பிடிபட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை இ.சதீஸ்வரன் என்பவரது சிறகு வலையிலேயே இச்சுறாமீன் பிடிபட்டுள்ளது. 2003, 1999, 1998ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் சுமார் 200 கிலோ கிராம் நிறை கொண்டு சுறாமீன்கள் பள்ளிக்குடா மீனவர்களினால் பிடிக்கப்பட்டிருந்தது.

## மீண்டும் சமாதானப் பேச்சில் கலப்பது சகல இன மக்களுக்கும் முக்கியமானது

### வாஷிங்டன் மாநாட்டு பிரதிநிதிகள் வலியுறுத்து

போர் நிறுத்த ஒப்பந்தத்தைப் பாதுகாக்கும் அதேவேளை, மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வது சிறிலங்காவின் சகல இன மக்களுக்கும் முக்கியமானதாகும்.

இவ்வாறு வாஷிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

டோக்கியோ மாநாட்டில் இணங்கிய சிறிலங்காவிற்கான வெளிநாட்டு உதவியை இடைநிறுத்த எந்தவொரு காரணமும் இல்லையென்று டோக்கியோ உதவிக் குழுவின் துணைத் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

டோக்கியோ உதவிக் குழுவின் இணைத் தலைவர்களான ஜப்பான், நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய சமூகத்தின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள்.

சமாதான நடவடிக்கைகள்

(IV ஆம் பக்கம் பார்க்க)

## தனிப்பட்டியலில் போட்டியிட பௌத்த பிக்குகள் முடிவு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் பௌத்த மத குருமார்கள் தனிப்பட்டியலில்போட்டியிடவுள்ளார்கள். இந்த முடிவினை கண்டிஐக்கிய பௌத்த பலமண்டலயம் தீர்மானித்துள்ளது.

கடந்த 15ஆம் திகதி கெப்பிட்டிபொல மண்டபத்தில் மல்வத்தைப் பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பௌத்த குரு அலுத்கம தம்மானந்த தலைமையில் சுமார் மூன்றரை மணிநேரம் நடைபெற்ற வாதப்பிரதிவாதங்களுக்குப் பின்னர் இந்தக் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வேட்பாளர்கள் பட்டியலைத் தயாரிக்கவும் பௌத்த பிக்குமார்கள்,பொதுமக்கள் அடங்கிய 16 பேர்கள் கொண்ட குழுதெரிவு செய்யப்பட்டுள்ளது.

பௌத்த குருமார்கள் தனித்தே

(IV ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**காணி**

**விற்பனைக்குண்டு**

மல்லாவியில் புகழேந்தி நகரில்(1ஆம் யூனிற்) நமனன் குளத்தில் வீடு கிணற்றுடன் கூடிய 1/4 ஏக்கர் தென்னம்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு து.சிரேஸ்கரன், சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.
T.P 0602213215
T.P 0712373352
(4235)

## விசேட வகுப்பு

ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான விசேட வகுப்பு நடைபெறுகின்றது. ஆசிரியர்:திரு.சு.சரவணபவன் (B.sc)
**வெண்ணிலா கல்வி நிலையம், மல்லாவி.**
(4108)

## பெயர் மாற்றம்

கந்தையா மாடசாமி என்ற பெயரை கந்தையா மோகன் என 17-02-2004 இலிருந்து மாற்றியுள்ளேன்.
(4251) **வட்டக்கச்சி**

# சாவு அறிவித்தல்



## இராமநாதர் அன்னலிங்கம்

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் விநாயகபுரத்தை வதிவிடமாகவும்கொண்ட இராமநாதர் அன்னலிங்கம் என்பவர் 18.02.2004 அதாவது புதன்கிழமை நேற்று காலமானார். இவர் காலஞ்சென்ற இராமநாதர் நல்லம்மாவின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான முத்துலிங்கம், சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தவமணி - இந்தியா, சுந்தரலிங்கம் - வட்டக்கச்சி, நாகராசா - வட்டக்கச்சி, முத்துலட்சுமி, இராசலட்சுமி, தேவன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார். பரராசசிங்கம் சொர்ணம்மாவின் மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், அருள்ராஜ்(மகன்), காலஞ்சென்ற கலைச் செல்வி, மாவீரர் அறிவினி, சோபிகா, தவறஞ்சினி ( இந்துக் கல்லூரி மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், சுப்பிரமணியம், செல்வா(சுவிஸ்), மகேந்திரன், பாலகிருஸ்ணன், மனோகரன், மகேந்திரன், தர்மன் ஆகியோரின் மைத்துனரும், தேவி. மல்லிகா, பவானி; சுநா, நளா ஆகியோரின் மைத்துனரும் ஆவார். வினோதினி, யோகேஸ்வரி, நாகேஸ்வரி, தயாபரன் (நோர்வே), யோகராசா (நோர்வே), தர்மராஜா (சுவிஸ்), உதயகுமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார். பிரிதாவின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை இன்று வியாழக்கிழமை (19.02.2004)10.00மணியளவில் ஆனந்தநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
**ந. தவமணி (சகோதரி)**
(3529)

## 3019 பொலிசாருக்கு பதவியுயர்வு

(கொழும்பு)

3019 பொலிசாருக்குப் பதவி உயர்வு வழங்க சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா நடவடிக்கை எடுத்து வருகின்றார்.

1927 பொலிஸ் கான்ஸ்டபிள்கள், பொலிஸ் சார்ஜன்ட் தரத்துக்கும், 675 சப் இன்ஸ்பெக்டர்களுக்கு இன்ஸ்பெக்டர் தரத்திற்கும் பதவி உயர்த்தப்படவுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

பதவி உயர்வு வழங்கப்படவுள்ள இந்த 3019 பேரும் கடந்த 15 வருடகாலமாகப் பதவி உயர்வு வழங்கப்படாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொது மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டல்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி மாயவனூர் கோமதன்-படிப்பக வளாகத்தில் அண்மையில் பொது மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்றது.

அடிக்கல்லினை உள்ளூராட்சி திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் நாட்டி வைத்தார். மாயவனூர் கிராம சேவையாளர் ஜோன் ஜெகநாதன் மற்றும் வட்டக்கச்சிக் காவல்துறைப் பொறுப்பாளர் சுந்தரலிங்கம், கிராம அபிவிருத்திச் சங்கம், ஊரக வளர்ச்சிக் குழு, கமக்கார அமைப்பு, மாதர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (12)

## 'டெங்கு' காய்ச்சலால் பாதிப்புற்றோர் உயர்வு

திருகோணமலை மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளது.

மேலும் 4 பேருக்கு டெங்குக் காய்ச்சல் அறிகுறி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் அவர்களின் இரத்தம் வைத்திய பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டோர் திருகோணமலை வைத்தியசாலையிலும் கந்தளாய் வைத்தியசாலையிலும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணுலகில்
26 • 12 • 1948



விண்ணுலகில்
22 • 01 • 2004

## நாட்டுப்பற்றாளர் அமரர் திரு. பொன். விநாயகமூர்த்தி

**தனக்கென்று வாழாது**
**தாயகப்பற்றுடனே சேவைகள் பல செய்து**
**இன்று மீளாத் துயில் கொள்ளும் எங்கள்**
**அன்புச் செல்வத்தின் ஆத்மா சாந்தி அடைய**
**ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

19-02-2004 வியாழக்கிழமை அன்று அந்தியேட்டிக்கிரியை கீரிமலையில் நடைபெற்று 21-02-2004 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ் விலும், மதிய போசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

திருமதி தை. விநாயகமூர்த்தி
(ஆசிரியர்)
பரவிப்பாஞ்சான்,
கிளிநொச்சி.

**குடும்பத்தினர்**
(3530)

# நியாப் திட்டத்தில் சம்பந்தப்பட்டசகல கிராம அபிவிருத்திச்சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம், கமக்காரர் அமைப்பிற்கான அறிவுறுத்தல்

### விடயம்: ஜீவனோபாய ஆதாரத்திட்டக் கொடுப்பனவுகளுக்கும், நியாப் திட்ட முன்னேற்றங்களுக்குமா[illegible] கூட்டம்

2003ஆம்ஆண்டுக்குரிய மையக்கிராமங்களுக்கான ஜீவனோபாய ஆதாரத்திட்டக் கொடுப்பனவுகள் வழங்குவதற்கான அனுமதி கீழ்வரும் இறுக்கமான நிபந்தனைகளுடன் வழங்கப்பட்டுள்ளது.

1. 2001,2002ஆம் ஆண்டுக்கான திட்டங்களில் உங்கள் பிரிவின் கீழ் உள்ள மையக் கிராமங்களிற்கான முதல் மாதத்திற்கான முன்னேற்ற அறிக்கை தற்போது தங்களுக்கு வழங்கப்பட்ட படிவத்தில் அடுத்தமாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும். மற்றும் மீளளிப்புத் தொகை மாதாந்தம் கூடிச்சென்று சித்திரை மாதம் 85 % இருத்தல் வேண்டும்.

2. நியாப் பிரதித் திட்டப்பணிப்பாளர் பணிமனை நீர்ப்பாசன வளாகம் ஒட்டுசுட்டானில் இருந்து நேரடியாக பயனாளிகளுக்கு ஆரம்ப வைப்புப்பணமாகிய ரூபா 500.00 ஒவ்வொருவரும் செலுத்தியதன் பின்னர் கையேடுகள் வழங்கப்படும்.

3. முதலாவது தொகுதி கடன் உதவி அரசாங்க அதிபர்களால் வழங்கப்படும்போது இக்கையேட்டில் கடன்தொகை, கடன் மீளளிப்புத் தொடங்கும் திகதி, மாதாந்த மீளளிப்புத் தொகை முதலியவை பதியப்பட்டு பிரதித் திட்டப்பணிப்பாளரது பார்வைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஒவ்வொரு புத்தகமும் அவரால் அதிகாரம் அளிக்கப்பட்டவரால் கையெழுத்து இடப்பட்டதன் பின்பே இரண்டாவது தொகுதிக் கடன் வழங்கப்படும்.

4. கடன்பெற்ற ஒவ்வொருவரும் கருணைக்காலம் உட்பட மாதாந்தம் குறைந்தது ரூபா 100.00ஆவது சேமிப்பாக செலுத்தி புத்தகத்தில் பதியப்பட்டிருத்தல் வேண்டும். இது மாதாந்தம் நியாப் பிரதித்திட்டப் பணிப்பாளர் பணிமனைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஒவ்வொரு புத்தகமும் அவரால் அதிகாரம் அளிக்கப்பட்டவரால் கையெழுத்து இடப்பட்டதன் பின்பே இரண்டாவது தொகுதிக் கடன் வழங்கப்படும்.

எனவே கீழ்வரும் அட்டவணைப்படி நியாப் திட்ட முன்னேற்றம் ஆராய்வது மற்றும் ஒவ்வொரு மையக்கிராமங்களிலும் முன்னுரிமை அடிப்படையில் முதல் 50 பயனாளிகளுக்குமான கையேடுகள் வழங்குதல் கீழ்வரும் அட்டவணைப்படி இடம்பெறும். எனவே தயவுசெய்து தமிழர்புனர்வாழ்வுக் கழகத்தினரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்னுரிமைப் பட்டியலில் முதல் 50 பயனாளிகளையும் 500.00ரூபாவுடன் கீழ் குறிப்பிட்ட தினத்தில் சமுகமளிக்கும்படி அறிவுறுத்தவும்.

| உ.அ.அ.பிரிவு | இடம் | திகதி | நேரம் |
|---|---|---|---|
| க.து.பற்று<br>ஒட்டுசுட்டான்<br>புதுக்குடியிருப்பு | பிரதித் திட்டப்பணிப்பாளர் பணிமனை<br>நியாப்- முல்லைத்தீவு<br>நீர்ப்பாசன வளாகம்,<br>ஒட்டுசுட்டான். | 24.02.2004 | காலை 8.30 மணி |
| மாந்தை கிழக்கு<br>துணுக்காய் | நீர்ப்பாசனத் திணைக்களம்<br>வவுனிக்குளம் | 25.02.2004 | காலை 8.30 மணி |

உதவி அரசாங்க அதிபர்கள் தயவுசெய்து ஒவ்வொரு மையக்கிராமத்திலும் முதல் 40 வீதக் கொடுப்பவிற்கான உறுதிப்படுத்தப்பட்ட கொடுப்பனவு உறுதிச்சீட்டை உடனடியாக அனுப்பிவைத்தால் இத்தினத்தில் தங்கள் பிரிவின் கீழ்வரும் மையக் கிராமங்களுக்கான காசோலைகள் தங்களிடம் கையளிக்கப்படும்.

இதன்போது மாதர் கிராம அபிவிருத்திச்சங்கத்தினது வங்கிக்கணக்குப் புத்தகத்துடன் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியவர்களையும் சமுகமளிக்குமாறு அறிவுறுத்தவும். ஏற்கனவே ஜீவனோபாய ஆதாரத்திட்டம் எடுத்த சங்கங்கள் கடன்பதிவேடுகள், வட்டிப்பதிவேடுகளையும் கொண்டு வருதல்வேண்டும்.

இக் கூட்டம் மிகவும் முக்கியமானதால் உங்கள் தனிப்பட்ட பிரசன்னத்தையும் ஒத்துழைப்பையும் இவ்வலுவலகம் நாடிநிற்கின்றது.

கூட்டத்திற்கு வரும்போது தங்கள் பகுதியில் நடைபெற்ற நியாப் வேலைகளின் முன்னேற்ற அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும்.

**எந்திரி எஸ்.எஸ்.சிவகுமார்,**
**பிரதித் திட்டப்பணிப்பாளர்,**
**நியாப்-முல்லைத்தீவு.**

(சி-7160)

care

# உலர்வலய விவசாய அபிவிருத்திக் கருத்திட்டம் (DZADP)

## மன்னார் பிரதேச அலுவலகம்

கெயர் சர்வதேசம் இலங்கையில் முன்னணி இடத்தைப் பெற்றுள்ளதோர் அரச சார்பற்ற ஸ்தாபனம் ஆகும். பொருளாதார நிலைமைகளை மேம்படுத்தல் மற்றும் சமூகத்தில் பின்தள்ளப்படுதல் போன்ற பிரச்சினைகளை எதிர்நோக்குவது ஆகியவற்றில் அது மும்முரமாக ஈடுபட்டுள்ளது.

உலர்வலய விவசாயஅபிவிருத்திக் கருத்திட்டம் உலர்வலயத்தைச் சார்ந்த சிறிய அளவிலான விவசாயக் குடும்பங்கள் ஸ்திரமாகத் தம் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்த உதவுவதில் ஈடுபட்டுள்ளது. இக்கருத்திட்டம் பெண்கள் மற்றும் இளம்வயதினரை அரவணைப்பதில் விசேட கவனம் செலுத்துவதோடு சம்பந்தப்பட்ட இலங்கை அரச நிறுவனங்கள் மற்றும் பிரதேச அரசசார்பற்ற ஸ்தாபனங்களோடு இணைந்து செயற்படுகிறது. DZADP கருத்திட்டத்துக்கு ஐரோப்பிய சங்கம் நிதி வழங்குகிறது.

இக்கருத்திட்டம் அநுராதபுரம், மொனராகலை, அம்பாந்தோட்டை மற்றும் புத்தளம் ஆகிய பெரும்பாகங்களில் 2000ஆம் ஆண்டு தொடக்கம் மும்முரமாகச் செயற்பட்டு வருகிறது. தற்போதுள்ள செயற்பாட்டைப் பலப்படுத்தவும் 2005வரை அதன் நோக்கங்களை அடைவதில் உதவுவதற்காகவும் பின்வரும் ஆளணியினர் எமக்குத் தேவைப்படுகின்றனர்.

### குழுத் தலைவர்

முழுக் கருத்திட்டத்தையும் பொதுவாகத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதுமுதல் மன்னார் மாவட்டத்தில் கருத்திட்டத்தின் நடவடிக்கைகளைக் கண்காணித்தல் ஆகியவற்றுக்கு குழுத்தலைவர் பொறுப்பாகவிருப்பார். பெரும்பாகத்தில் DZADP இன் பெறுபேறுகளை எய்துவதற்காகக் குழுத்தலைவர் 8 வேலைத்திட்ட மற்றும் 3 துணை ஆளணியினருக்குத் தலைமை தாங்குவார்.

அவள் அல்லது அவர் கருத்திட்ட நோக்க அமைப்புக்குள் விளக்கப்பட்ட கருத்திட்டத் தாக்கங்களுக்குப் பொறுப்புதாரியாக இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. பிரதான சம்பந்தப்பட்டோருடன் கலந்துரையாடி பெரும்பாக மட்டத்தில் இணைந்த ஆண்டுச் செயற்றிட்டத்தைத் தயாரிப்பது குழுத்தலைவரின் பொறுப்பாகும். அத்துடன் குடும்ப அமைப்புக்கள், வியாபார அபிவிருத்தி மற்றும் ஸ்தாபன ரீதியிலான அபிவிருத்தி/ஸ்தாபனத்தை ஸ்திரப்படுத்தல் மற்றும் நீர் வளங்களின் முகாமைத்துவம் போன்ற முக்கிய கருத்திட்ட அம்சங்களைப் பயனுறுவிதத்தில் இணைத்துச் செயற்படுத்துவதற்கும் அவர் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

அவள் அல்லது அவர் கருத்திட்டத்தின் மனித மற்றும் நிதி வளங்கள் முறையாக முகாமைத்துவப்படுத்தப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்துவதோடு இவ்விடயங்கள் பற்றி மன்னார் கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கு அவை பற்றி அறிக்கை விடுக்க வேண்டும். குறைந்த பட்சம் அபிவிருத்திக் கருத்திட்டமொன்றில் ஐந்து வருட முகாமைத்துவ அனுபவமுள்ள விவசாய அல்லது முகாமைத்துவப் பட்டதாரிகள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

### கருத்திட்ட இணைப்பாளர்-ஸ்தாபன ரீதியிலான அபிவிருத்தி/ஸ்தாபனத்தை ஸ்திரப்படுத்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரி குழுத்தலைவரின் மேற்பார்வையின் கீழ் ஸ்தாபன அபிவிருத்தி/ஸ்தாபன ஸ்திரப்படுத்தல் (ID/OS) செயற்பாட்டுத் திட்டமொன்றைத் தேவைகளின் பகுப்பாய்வுக்கமைய அபிவிருத்தி செய்வதற்குப் பொறுப்பாகவிருப்பார்.

(ID/OS) துறையின் நோக்கங்களை அடைவதில் பாலியல் சமத்துவத்துக்கு விசேட கவனம் செலுத்தல், சம்பந்தப்பட்டோருடன் இணைந்து செயற்படுதல், பங்குதார ஸ்தாபனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல் மற்றும் பயிற்சித்திட்டங்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்தும் திறமை விண்ணப்பதாரிகளுக்கு இருத்தல் வேண்டும். ஆங்கிலப் பாசைப் பாண்டித்தியம் அத்துடன் பகுப்பாய்வு மற்றும் பயிற்சித் திறமைகள் இதற்கான முற்தேவைகளாகும்.

(ID/OS) நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 3வருட அனுபவம் உள்ள சமூகவியல் பட்டதாரிகள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### கருத்திட்ட இணைப்பாளர்-விவசாய அமைப்புக்கள்:

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரி தேவைகள் மதிப்பீடு மற்றும் செயற்படுத்துவதற்காக விவசாயத் திட்டமொன்றை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாகவிருப்பார். குறைந்த அளவில் புறத் தொழில்நுட்ப உட்பாய்ச்சல் மற்றும் கலந்துகொள்ளக்கூடிய தொழில்நுட்ப அபிவிருத்தி ஆகியவற்றுக்கு விசேட கவனஞ் செலுத்தி விவசாயத் துறையில் நோக்கங்களை இனங்கண்டு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல். அவள் அல்லது அவர் பின்னலமைப்பொன்றைக் கொண்டு பங்குதாரர்களுடன்/புற ஸ்தாபனங்களுடன் இணைப்புக்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்பதோடு பயிற்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்து நடைமுறைப்படுத்துவதற்கும் பொறுப்பாக இருக்க வேண்டும்.

உலர்வலய விவசாயத் திட்டங்களில் குறைந்த பட்சம் 3வருட நேரடி அனுபவமுள்ள விவசாயத்துறையில் பட்டம் அல்லது டிப்ளோமா உள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### கருத்திட்ட இணைப்பாளர் - வியாபார அபிவிருத்தி

தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரி தேவைகள் மதிப்பீட்டை நடத்தல் மற்றும் செயற்படுத்துவதற்கான வியாபாரத் திட்ட அபிவிருத்தி ஆகியவற்றுக்குப் பொறுப்பாகவிருப்பார். ஆராய்ச்சி மற்றும் சந்தை புலனாய்வுகளுக்கான திட்டமொன்று இனங்காணப்பட்டு அமைக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்டோரை ஒன்றுதிரட்டி உள்ளக மற்றும் புறத் தொடர்புகளை ஏற்படுத்தல், வியாபாரத் திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல், பயிற்சித்திட்டங்கள் மற்றும் அமைப்புக்களைத் தயாரித்து பயிற்சிநெறிகளை நடத்துதல், செயற்பாடுகள் மற்றும் பெறுமதி கூட்டல் ஆகியவற்றுக்கான அமைப்புக்களை ஏற்படுத்தல், துறைகளைக் கண்காணிப்பதை உறுதிப்படுத்தி சீர்தூக்கிப் பார்க்கும் திட்டமொன்றை அமுல்செய்தல்.

அபிவிருத்தி நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 5வருட அனுபவமுள்ள விவசாயப் பொருளாதாரம் அல்லது வியாபார பரிபாலனம் ஆகியவற்றில் பட்டம் அல்லது டிப்ளோமா உள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### கருத்திட்ட இணைப்பாளர்-நீர்வளங்கள் முகாமைத்துவம்

மன்னார் பெரும்பாகத்தில் நீர் வளங்கள் முகாமைத்துவ அம்சத்தின் தொடர்ச்சியான அமுலாக்கத்துக்கு நீர் வளங்கள் முகாமைத்துவத்துறை இணைப்பாளர் பொறுப்பாக இருப்பார்.

அவள் அல்லது அவர் கருத்திட்டத்தின் ஆதரவுடன் பிரதேச சமூகங்களின் குளங்கள் புனரமைப்பு முயற்சிகளை சம்பந்தப்பட்டோருடன் கலந்துரையாடி அபிவிருத்தி செய்து விசாலிப்புக்குள்ளாகும் நீர் வளங்கள் முகாமைத்துவத்தில் தலையாய பங்கினை வகிப்பார். நீர் வளங்கள் முகாமைத்துவம் தொடர்பான நடவடிக்கைகளை அமுலாக்குவதில் உதவுவதற்காக பங்காளர்கள் (இலங்கை அரச மற்றும் அரச சார்பற்ற ஸ்தாபனங்கள்) ஆகியவற்றை இனங்கண்டு ஊக்குவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளையும் அவள் அல்லது அவர் மேற்கொள்வார். இத்துறையின் இணைப்பாளர் பங்காளர்களின் கொள்ளளவினை மேம்படுத்துவதற்குத் தோதான பயிற்சி நெறியொன்றை அமைப்பதை உறுதிப்படுத்துவதோடு அத்திட்டத்தை சரியான நேரத்தில் அமுல்செய்வதிலும் இணைந்து செயற்படுவார்.

நீர்ப்பாசன அமைப்புக்களின் புனரமைப்புக்கு மற்றும் ஒன்றிணைந்த நீர்ப்பிடிப்பு (Watershed) முகாமைத்துவத்துக்குத் தேவையான பயிற்சித் திட்டங்களுக்குத் தேவையான தொழில்நுட்ப உட்பாய்ச்சல்கள் மற்றும் வழிகாட்டலை அவள் அல்லது அவர் வழங்குவார்.

நீர்வளங்கள் அபிவிருத்தி நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 4வருட அனுபவமுள்ள விவசாயம் அல்லது இயற்கை வளங்கள் முகாமைத்துவப் பட்டம் உள்ளவர்கள் விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### கருத்திட்ட அலுவலர்கள் (4வெற்றிடங்கள்)

மன்னார் பெரும்பாகத்தில் DZADP இனை அமுல் செய்வதில் கருத்திட்ட அலுவலர்கள் உதவியாக இருப்பார்கள். பங்குதார ஸ்தாபனங்களுடன் மற்றும் பயன்பெறும் சமூகங்கள் குறிப்பாக, விவசாய ஸ்தாபனங்கள் ஆகியவற்றுடன் DZADP இன் புற நடவடிக்கைகளை ஒழுங்காக இணைப்பதில் அவள் அல்லது அவர் பொறுப்பாகவிருப்பார்.

தலையீடுகளுக்கான தோதான முறைமைகளைத் தேர்ந்தெடுப்பதில் துறைசார்ந்த இணைப்பாளர்களுக்கும் ஏனைய DZADP பணியினருக்கும் கருத்திட்ட அலுவலர்கள் உதவியாக இருப்பதோடு அவள் அல்லது அவர் பங்குதார ஸ்தாபனங்களுக்கான பயிற்சி நெறிகளை அமைத்துச் செயற்படுத்துவதற்கும் பொறுப்பாகவிருப்பார்.

பங்குதார இயக்கங்களின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதுட்பட பங்குதார ஸ்தாபனங்களுக்கு அவற்றின் புற நடவடிக்கைகளில் அவள் அல்லதுஅவர் ஆதாரமாயிருப்பார். உள்நாட்டு அரசாங்க நிறுவனங்கள் மற்றும் விவசாய இயக்கங்களுடன் உருப்படியான, அத்துடன் நட்புறவைப் பேணுவதிலும் கருத்திட்ட அலுவலர் முன்னணி வகிப்பார்.

உலர் வலய அபிவிருத்தி நடவடிக்கைகளில் குறைந்த பட்சம் 2வருட அனுபவத்துடன் விவசாயம் அல்லது சமூகவியலில் பட்டம் பெற்றோர் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

### நிதி மற்றும் நிர்வாக அதிகாரி-மன்னார்

கருத்திட்டத்துக்கு நிதி, நிர்வாக, செயலாளர் சேவை மற்றும் அலுவலக முகாமைத்துவ ஆதாரம் ஆகியவற்றை வழங்குவதற்குப் பொறுப் பாகவிருப்பார். வருடாந்த மற்றும் பல்வருட வரவு- செலவுத் திட்டங்கள் தயாரிப்பு அத்துடன், அவற்றின் திருத்தங்களுக்கு அவள் அல்லது அவர் பங்களிப்பை வழங்குவார். மாதாந்த அடிப்படையில் அவர் கருத்திட்ட செலவீனத்தை கண்காணிப்பதோடு அவள் அல்லது அவர் வரவு- செலவுத் திட்டம் தொடர்பான முக்கிய விடயங்கள் தொடர்பாகப் பணியாளர்களுக்கு ஆலோசனையும் வழங்குவார்.

கணக்கியல் உயர் தொழில் துறையில் அரைச்சித்தி மற்றும் ஒத்த பதவியில் அனுபவம் விரும்பத்தக்கது. கணனி அறிவு (Word, Excel,Access, power point போன்றவை) கட்டாயமிருத்தல் வேண்டும்.

சகல பதவிகளும் மன்னாரிலேயே உள்ளதோடு கவர்ச்சியான சம்பளத்திட்டங்களும் பொதுவான கெயர் நலாபலன்களும் வழங்கப்படும். இப் பதவிகள் ஒப்பந்த அடிப்படையிலானவையாகும். இப் பதவிகளுக்கு சிறந்த தமிழ் மற்றும் ஆங்கில மொழித் தேர்ச்சி அவசியமாகும்.

தோதான தகுதியுடைய விண்ணப்பதாரிகள் சொந்தக்காரரல்லாத இரு மத்தியஸ்தர்களின் பெயர் விலாசங்களுடன் (தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி இலக்கத்துடன்) இவ்வறிவித்தல் தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களைத் தாக்கல் செய்ய வேண்டும். விண்ணப்பத்தில் தோதான விபரத் திரட்டு (ஆகக் கூடியது 3 பக்கங்கள் ) அத்துடன், இலங்கையில் உலர் வலய அபிவிருத்திக்கு நீங்கள் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பது பற்றிய ஒரு பக்கத்தைக் கொண்ட அசல் சுய விளக்கமொன்றையும் சேர்க்க வேண்டும்.

நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் கடித உறையின் இடது புற மேற்பக்கத்தில் குறிப்பிடப்பட வேண்டும். சகல விண்ணப்பங்களும் மிகுந்த இரகசியத்துடன் பேணப்படும். சகல விண்ணப்பதாரிகளுக்கும் நாம் நன்றி நவில்கிறோம். ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் மாத்திரமே தொடர்புகொள்வோம்.

பெண்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

கெயர் சமவாய்ப்பினை வழங்கும் தொழிலதிபராவார்.

**பணிப்பாளர்– ஆளணி அபிவிருத்தி,**
**கெயர் சர்வதேசம்– சிறிலங்கா,**
**7/A, கிறகொீஸ் வீதி, கொழும்பு–07.**
**e-mail:srilanka@ care.lk**

(சீ-8794)

# 3வது தமிழீழ தேசிய பெருவிளையாட்டு போட்டிகள் நாளை கிளி.இல் ஆரம்பம்

(கிளிநொச்சி)

தமிழீழத்தின் எட்டு மாவட்டங்களின் விளையாட்டு வீரர்களை தமிழீழத் தேசியக் கொடியின் கீழ் ஒன்



றிணைக்கும் மூன்றாவது தமிழீழ தேசியப் பெரு விளையாட்டுப் போட்டி நாளை கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

இதற்காக கிளிநொச்சி மாத் திய மைதானம் அலங்கரிக்கப்பட்டு தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளதுடன் கிளிநொச்சி நகரமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வுகளாக காலை 9.00 மணிக்கு எட்டு மாவட்டங்களின் போட்டியாளர்கள் மைதானத்தில் அணிவகுத்து நிற்க மாவீரர்களின் திருவுருவப்படங்கள் எடுத் துச்செல்லல் பொதுச்சுடரேற்றல் ஈகச்சுடர் ஏற்றல், மலர் மாலை அணிவித்தல், தமிழீழ தேசியக் கொடியேற்றல், அக வணக்கம் செலுத்தல் என்பவற்றைத் தொடர்ந்து விளையாட்டுத்துறை கொடி ஏற்றல், மாவட்டக்கொடியேற்றல், ஒலிம்பிக் தீபம் ஏற்றல் போட்டியாளர்கள் சத்தியப் பிரமாணம், நடுவர்கள் சத்தியப்பிரமாணம், வரவேற்புரை தலைமைஉரை, சிறப்புரை, தமிழர் பாரம்பரிய கலை வெளிப்பாட்டுக்காட்சிகள், மாணவர்களின் ஜிம்னாஸ்ரிக் கண்காட்சி, மாணவியரின் இசையுடனான உடற்பயிற்சிக் கண்காட்சி என்பவற்றுடன் கலை அங்குரார்ப்பண நிகழ்வுகள் நிறைவுபெறும்.

அதனைத் தொடர்ந்து மாலை 3.00 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட தெரிவு அணிக்கும் அம்பாறை மாவட்ட தெரிவு அணிக்கும் இடையிலான உதைபந்தாட்டப் போட்டியுடன் விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகின்றன.

தொடர்ந்து 4.30 மணிக்கு மன்னார், வவுனியா அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப்போட்டியும், இரவு 7 மணிக்கு மின்னொளியிலான திருமலை-முல்லைத்தீவு, அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியும் 8 மணிக்கு மட்டு-யாழ்ப்பாண அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளுடன் முதல்நாள் போட்டிகள் நிறைவுபெறுகின்றன.

இது இவ்வாறிருக்க ஏழு நாட்கள் நடைபெறவுள்ள மேற்படி போட்டிகளில் உதைபந்தாட்டம், வலைபந்தாட்டம், கரபந்தாட்டம் என்பவற்றின் கணிசமான போட்டிகள் இம்முறை மின்னொளியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஈரானில் ரயில் விபத்து 200 பேர் பலி: 350 பேருக்குக் காயம்

(லண்டன்)

ஈரானில் நடைபெற்ற கோர ரயில் விபத்தில் இருநூறிற்கும் மேற்பட்டோர் பலியானதுடன் 350 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் பலர் அவசர மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்களும் விபத்து நடந்த இடத்தைப் பார்க்கச் சென்ற உள்ளூர் அதிகாரிகளும் என்று தெரிவிக்கப்படுகிறது.

விபத்து நடந்ததையடுத்து ரயில் வண்டியில் பற்றிக் கொண்ட தீயை அணைக்க முற்பட்ட அவசர மீட்புப் பணியாளர்கள் ரயிலில் இணக்கப்பட்டிருந்த பெற்றோல் மற்றும் இரசாயனப் பொருட்களடங்கிய கொள்கலன்கள் வெடித்ததில் பலியாகியுள்ளனர்.

## வேட்பாளர்...

பட்சத்தில் அதைத் திணிப்பு அல்லது அழுத்தத்தின் மூலம் பெறப்படுகின்ற செயல் என யாராவது கூறுவார்களேயானால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறிய இரா. சம்பந்தன் வேட்புமனு எந்தவிதமான இடையூறிற்கும் உள்ளாக் கப்படாமல் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் தாக்கல் செய்யப்படும்.

இதேவேளை, வேட்பாளர் பட்டியல் தயாரிக்கப்படும் நடைமுறை குறித்து ஆனந்த சங்கரியின் குற்றச்சாட்டினை நிராகரித்த இரா. சம்பந்தன் கடந்த காலங்களிலும் நாங்கள் பகிரங்கமாக எவரிடமிருந்தும் விண்ணப்பங்களைக் கேட்கவில்லை. கட்சியின் ஆதரவாளர்கள் விண்ணப்பிப்பது சகஜம். அவ்விதமாக இம்முறையும் பலர் விண்ணப்பித்தனர் என்றார்.

## சந்திரசேகரன்..

நேற்று பகல் 11.00 மணி முதல் 12.00 மணிவரை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளருடன் மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பகல் 12.00 மணிமுதல் பி.ப.1.00 மணிவரை தென்மாகாண பாராளுமன்ற உறுப்பினரும் கட்சி உறுப்பினர்களும் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

## தொண்டமானும்...

இரத்தினபுரி நகரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றுகையில் இவ்வாறு கூறிய அவர் மேலும் கூறுகையில்,

அமைச்சர்கள் ஆறுமுகம் தொண்டமான் ரவூப் ஹக்கீம் இன்றுவரை எம்முடன் இருக்கின்றனர். எதிர்வரும் தேர்தலில் எம்முடன் இணைந்தே போட்டியிடுகின்றனர். அத்துடன் முன்னாள் பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினர்கள் 15பேர் இன்னும் சில நாட்களில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கொள்ளவுள்ளார்கள். இவர்கள் அனைவரினதும் ஒத்துழைப்பில மீண்டும் சக்தி மிக்க ஐ.தே.மு. அரசாங்கத்தை அமைப்போம்.

பொ.ஐ.மு., ஜே.வி.பி. ஆகியன இணைந்து இன்று புதிய கூட்டுக்கட்சியை அமைத்துள்ள போதும் அதிகாரப்பகிர்வு குறித்து எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. இதனால் இக்கூட்டு வெகுவிரைவில் சின்னாபின்னமாகிவிடும் என மேலும் கூறியுள்ளார்.

யுத்தமா? சமாதானமா? என்பதை தென்பகுதி மக்கள் எதிர்வரும் தேர்தலில் தீர்மானிக்க வேண்டும் என்று புலிகள் தெளிவாகக்கூறியுள்ளார்கள்.

இதனைத் தென்பகுதி மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். ஏனெனில் கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தத்தால் 41ஆயிரம் ராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

## தனிப்...

போட்டியிடுவது என்றும் வேட்பாளர்கள் பட்டியல் உட்பட இது தொடர்பான பணிகளை முன்னெடுத்துச் செல்ல தெரிவு செய்யப்பட்டுள்ள நடவடிக்கைக் குழுவினர்களின் அறிக்கைகளுக்குப் பின் இறுதி முடிவினை மேற்கொள்ளவதெனவும் பௌத்த மதகுருமார்கள் முடிவு செய்துள்ளார்கள்.

இக்கூட்டத்தில் தேர்தலில் போட்டியிட விரும்பும் பௌத்த பிக்குகள் பூமிபுத்திர கட்சி அல்லது ஜாதிக சிஹல உறுமயக் கட்சி (முன்னாள் சிங்கள உறுமய) கட்சிகளில் வேட்பாளர்களாகப் போட்டியிட வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

## மீண்டும்...

மற்றும் அவற்றின் வளர்ச்சிக்கு அமைய சிறிலங்காவிற்கு உதவி வழங்க டோக்கியோ மாநாட்டில் எடுத்த தீர்மானத்தில் எந்த மாற்றமுமில்லை என்று துணைத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் மக்கள் தமது கிராமங்களில் மீளக் குடியேறுவதனால் மனிதாபிமான உதவிகளின் தேவை அதிகரித்து வருவதாகவும், இந்நிலையில் சிறிலங்காவில் சமாதான எதிர்பார்க்கை மேலும் அதிகரித்துள்ளது.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்தக் கட்சியும் மத ரீதியாகவோ இன ரீதியாகவோ செயற்படாது. சமாதானத்தின் தேவைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவது அத்தியாவசியமாகும் என இந்த மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை, போர் நிறுத்தத்தை வெற்றிகரமாக மேற்கொள்வது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் அம்மாநாட்டில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, பாராளுமன்றம் கலைப்பு குறித்தும் திடீர் தேர்தல் குறித்தும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

## தமிழ்...

முழுதாக ஏற்றுக் கொள்கின்றோம். ஆதரிக்கின்றோம்.

அத்தகைய உறுதியான தெளிவான ஒரு ஆணையை ஈழத்தமிழ் தேசிய இனம் வழங்க வேண்டும்.

அதேபோன்று வடக்கு-கிழக்கிற்கு வெளியே வாழ்கின்ற மக்களைப் பொறுத்த வரையில் மேல்மாகாணத்தைப் பொறுத்த வரையில் மேல் மாகாணத்தில் தலைமை அரசியல் கட்சியாக மேல் மாகாண மக்கள் முன்னணி செயற்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதேபோல மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக அங்கே பல கட்சிகள் இருப்பது குறித்து இங்கு பேசிக் கொண்டோம்.

கொழும்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மேல் மாகாண மக்கள் முன்னணி வெற்றிபெற வேண்டும். அந்த வெற்றியின் மூலமாக மேல் மாகாணத்தில் குடியிருக்கும் தமிழ் மக்களின் அபிலாசைகளை முன்னெடுக்கும் அதேவேளையில் வடக்கு-கிழக்கு சகோதரர்களின் போராட்டத்திற்கும் கடந்த காலங்களைப் போன்று தொடர்ந்து உறுதியான ஆதரவான குரல்களை எழுப்ப வேண்டும் என்ற கோரிக்கைகளை இந்த இடத்திலே அரசியல்துறைப் பொறுப்பாளர் முன் வைத்திருந்தார். அதனை நாங்கள் ஏற்றுக் கொண்டுள்ளோம்.

முன்னையை விட எதிர்காலத்திலே உருவாக்கக் கூடிய பாராளுமன்றம் ஒரு தீர்க்கமான பாராளுமன்றமாக இருப்பதை நாங்கள் புரிந்து கொண்டிருக்கின்றோம்.

அந்த வகையில் மேல் மாகாண மக்கள் முன்னணி கடந்த காலங்களைப் போல தொடர்ந்தும் தெளிவான முறையிலே, ஒழுங்கான முறையிலே சிங்களப் பேரினவாதத்திற்கு முற்று முழுதாக நிர்ப்பந்தங்களைச் செலுத்தி அதன் மூலமாக வடக்கு-கிழக்கில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் விடுதலைக்கும் ஆதரவுக் குரல் எழுப்பும் அதேவேளையிலே, மேல் மாகாணத்திலே கொழும்பை மையமாகக் கொண்டு வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் மத்தியிலே, வட-கிழக்கு மக்கள், மலையக மக்கள் என்ற பேதங்களை அகற்றி ஒட்டுமொத்தமாக தமிழர் என்ற அடிப்படையிலே தமிழர்கள் வாழ வேண்டும், அணி திரட்டப்பட வேண்டும் என்ற அந்தக் கருத்தை நாங்கள் முன்வைத்திருக்கின்றோம். அதை முற்று முழுதாக அரசியல துறைப் பொறுப்பாளர் விடுதலைப் புலிகள் சார்பாக ஏற்றுக் கொண்டிருக்கின்றார். உண்மையிலேயே அவர்களின் கருத்தும் அதுவாகத்தான் இருக்கின்றது.

நாங்கள் தேர்தலிலே ஐக்கிய தேசிய முன்னணி பட்டியலுக்குள்ளே தான் போட்டியிடுகின்றோம். கூட்டணிக் கட்சியாகப் போட்டியிடுகின்றோம். அந்த யதார்த்தத்தைத் தெளிவான முறையிலே அரசியல்துறைப் பொறுப்பாளர் புரிந்து கொண்டிருக்கின்றார்.

ஏனென்றால், வடக்கு-கிழக்கில் உள்ள அரசியல் யதார்த்தங்கள் வேறு. வடக்கு-கிழக்கிற்கு வெளியேயுள்ள அரசியல் யதார்த்தங்கள் வேறு என்பதை தமிழீழ விடுதலைப்புலிகள் தெளிவாகப் புரிந்து கொண்டிருககின்றார்கள் என்றார்.

*கொழும்பில் தமிழ் மக்கள் சார்பில் உங்கள் கட்சி மட்டும் தான் போட்டியிடப் போகின்றதா? எனக் கேட்டபோது.

மேல் மாகாணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழ் மக்களின் தலைமைக் கட்சி என்ற முறையிலே நாங்கள் ஐ தே கட்சியுடன் பேச்சு வார்த்தை உடாத்தி அந்த அடிப்படையில் நாங்கள் போட்டியிடப் போகின்றோம். வேறு கட்சியும் கூடப் போட்டியிடலாம் போட்டியிடாமல் இருக்கலாம். அதைப் பற்றி அக்கறைப்படவில்லை.

மாறாக நாங்கள் எங்கள் மக்கள் அபிலாசைகளை முன்னெடுக்கும் கட்சியாக போட்டியிடப் போகின்றோம் என்றார். (சோ)

## தமிழ்மக்களின்....

செய்துள்ளீர்கள்?

சிறுபான்மைத் தமிழர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அவர்களது பலத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு தேர்தலாக அமைய வேண் டும் என்பதிலே நாங்கள் ஒரு உடன்பாடு கண்டிருக்கின்றோம். அதைப்போல தமிழர் கூட்டமைப்பும் பலம் பெறவேண்டும். ஏற்கனவே இருந்த பாராளுமன்ற அங்கத்துவ எண்ணிக்கை இதை விட அதிகரிக்க வேண்டும் அதன் மூலம் சனநாயக ரீதியாக முழு உலகத்திற்கும் சிறுபான்மை மக்களுடைய பிரச்சினையை சர்வதேச மயப்படுத்துவதற்கு வரும் பாராளுமன்றத்தினை சரியாகப் பயன்படுத்தவேண்டும் என்ற ஒரு முடிவுக்கு நாங்கள் வந்திருக்கின்றோம்.

*மலையகத்திலே நீங்கள் தனிக்கட்சியாக போட்டியிடப் போகிறீர்களா!அல்லது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேரப்போகின்றீர்களா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு எங்களுக்கு உடன்பாடு இருக்கின்றது. அதே நேரத்தில் மலையகத்திலே சில ["]ரதேசங்களிலே தனித்துவமாக ம் சில பிரதேசங்களிலே தமி ர் கூட்டமைப்போடு இணைந்தும் சில பிரதேசங்களிலே வாய்ப்புக்கேற்ற விதத்திலேயும் நாங்கள் போட்டியிடவேண்டியிருக்கின்றது. வடகிழக்கைப் போன்று தனித் தமிழ் மக்கள் வாழுகின்ற பிரதேசம் என்று அந்தப் பகுதியிலே நுவரெலியா மாவட்டத்தை மட்டும் தான் சொல்லமுடியும். ஏனைய பிரதேசங்களிலே அரசியல் ரீதியாக சில இராஜதந்திரங்களைக் கையாளவேண்டியிருக்கிறது.

*மலையகத்தில் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுவதாகில் எத்தனைபேர் போட்டியிடவுள்ளீர்கள்?

மலையகத்தைப் பொறுத்த வரையில் எங்கெங்கு வெற்றி பெற வாய்ப்பு இருக்கின்றதோ அங்கெல்லாம் போட்டியிடுவோம். வெற்றிபெறக் கூடிய வாய்ப்பு மட்டுமல்ல, தமிழர்களுடைய வாக்குஅல்லது தமிழர்களுடைய அரசியல் பலத்தை வெளிப்படுத்தக் கூடிய வாய்ப்புகள் எந்தெந்த மாவட்டங்களில் இருக்கின்றதோ, அங்கெல்லாம் நாங்கள் போட்டியிடுவதாகத் தீர்மானித்திருக்கின்றோம்.

*கூட்டமைப்பின் சின்னத்தில் தான் நீங்கள் போட்டியிடுவீர்களா?

இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. இன்னும் தமிழர் கூட்டமைப்போடு தமிழீழ விடுதலைப்புலிகள் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர்கள் முடிவெடுப்பார்கள். அந்த முடிவின் பின்பு தான் நாங்களும் ஒரு முடிவுக்கு வருவோம்.

*மீண்டும் நீங்கள் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரை சந்திக்க உள்ளீர்களா?

இன்னும் இரண்டு மூன்று நாட்களில் திரும்பவும் மீண்டும் சந்திக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படும் என்று நான் நினைக்கின்றேன்.

*அதன் பின்பு தான் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்வீர்களா?

நிச்சயமாகமேலும் ஒரு பேச்சுவார்த்தையின் பின்பு தமிழர் கூட்டமைப்போடும் பேச்சுவார்த்தையினை நடாத்தி தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பிலும் அவர்களுடைய கருத்தையும் அறிந்து. தற்போதைய அரசியல் சூழல் மலையகத்திலே இருக்கின்ற அரசியல் சூழல் தொடர்பாகவும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டுதான் ஒரு முடிவிற்கு நாங்கள் வருவோம்.

*தமிழ்க் கூட்டமைப்பு நாலு கட்சியுடன் ஐந்தாவது கட்சியாக இணைத்துக் கொண்டுதான் தேர்தலில் போட்டியிட நினைக்கிறீர்களா?

இன்னும் அதை நாங்கள் முடிவெடுக்கவில்லை.


## 31ம் நாள் நினைவஞ்சலி



எமது கல்வி நிலைய ஆசிரியர் திரு.கு.ரசிகுமார் அவர்களின் அன்புத் தந்தை

**அமரர்**
**வல்லி குணரத்தினம்**

அவர்களின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 10.05.1950
மறைவு 20.01.2004

*ஆசிரியர்கள், வெண்ணிலா கல்வி நிலையம், மல்லாவி.*

(4107)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.